S.C. 323 /2017

P.W.5 **திரு.சதீஸ்வரன்** **15.07 .2019**

**எதிரிகள் தரப்பில் கு. விசாரணை:**

நான் இலங்கை அகதிகள் முகாமில் குடியிருக்கின்றேன். நான் திருமணம் செய்ததும் அகதில் முகாமில் இருக்கும் ஒரு பெண் ஆவார். அகதிகள் முகாமிலிருந்து வெளியே செல்ல வேண்டுமென்றால் கேட்டில் என்ன காரணத்திற்காக செல்கிறோம் என்று பதிவு செய்துவிட்டுதான் செல்லவேண்டுமென்றால் சரிதான். மாலை 6.00 மணிக்குள் அகதிகள் முகாமிற்குள் இருக்க வேண்டுமென்றால் சரிதான். நான் அகதிகள் முகாமில் குடியிருக்க வேண்டுமென்றால் எங்கள் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் எங்களுக்கு தடையில்லா சான்று கொடுக்கவேண்டுமென்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் வரை வழக்கு சம்பவம் குறித்து யாரிடமும் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். நான் நீதிபதியிடம் சாட்சியமளிக்க வேண்டுமென்று போலிசாரிடம் எதுவும் கேட்டுக்கொள்ளவில்லை. அவர்கள் அழைத்து சென்றதாகத்தான் சாட்சியம் அளிக்க சென்றேன். முதல் விசாரணையில் நான் 2வது எதிரியை பார்த்தாக சொல்லிய அன்று அவர் குடித்துவிட்டு நிதானமில்லாமல் இருந்த போது தான் பார்த்தேன். நான் அகதிகள் முகாமில் தங்க வேண்டுமென்பதால் போலிசார் ஆதரவு வேண்டுமென்பதற்காக போலிசாரை கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.